

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (23.2.2024) முகாம் அலுவலகத்தில், உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் திருமதி அன்னா ஜெர்டே (Ms. Anna Bjerde) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தெற்காசிய மண்டல துணைத் தலைவர் மார்டின் ரைசர், சர்வதேச நிதி நிறுவன Country Manager வெண்டி வெர்னர் (Ms. Wendy Werner), உலக வங்கியின் பங்கு நிதி நிறுவனங்களின் திட்டத் தலைவர் (Equity Finance Institutions, Program Leader) பாவ்னா பாட்டியா, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் முதுநிலை துணைத் தலைவர் டி. ராஜேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### ED, CBI சோதனைக்குப் பின் பல நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு ரூ.335 கோடி நன்கொடை!

# பா.ஜ.க.வுக்கு கார்ப்பரேட் நிறுவனங்களின் நன்கொடை - விசாரணை வேண்டும்!

## நீதிமன்றத்தில் வழக்குத் தொடர காங்கிரஸ் முடிவு!

புதுடெல்லி, பிப்.24-

பா.ஜ.க.வுக்கு ரூ.335 கோடி நன்கொடை தொடர்பாக வெள்ளை அறிக்கை வேண்டும் என்றும் நன்கொடை வழங்கிய 30 நிறுவனங்களுக்கும் பா.ஜ.க.வுக்கும் என்ன தொடர்பு? என்றும் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் பேட்டி அளித்துள்ளார்.

அவரது பேட்டி வருமாறு:

அமலாக்கத்துறை, சிபிஐ சோதனைக்குப் பிறகு பல நிறுவனங்கள் பாஜகவுக்கு நன்கொடை வழங்கியது குறித்து விசாரணை நடத்த வேண்டும். பா.ஜ.க.வுக்கு கிடைத்த நன்கொடை குறித்து விசாரணை நடத்த உத்தரவிடக்கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது. அமலாக்கத்துறை, சி.பி.ஐ. சோதனைக்குப் பிறகு 30 நிறுவனங்கள் பாஜகவுக்கு ரூ.335 கோடி நன்கொடை வழங்கியுள்ளது. பா.ஜ.க.வுக்கு கிடைத்த நன்கொடை குறித்து உச்சநீதிமன்ற கண்காணிப்பில் விசாரணை நடத்த வேண்டும்.

அமலாக்கத்துறை, சி.பி.ஐ. சோதனைகள் மூலம் பல நிறுவனங்கள் பா.ஜ.க. அரசால் மிரட்டப்பட்டுள்ளன. அமலாக்கத்துறை, சி.பி.ஐ. சோதனைக்குப் பிறகு பல நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு நன்கொடை வழங்கியது குறித்து நிதியமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும். ED, CBI சோதனைக்குப் பின் பல நிறுவனங்கள் பாஜகவுக்கு ரூ.335 கோடி நன்கொடை வழங்கியது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். நன்கொடை வழங்கிய 30 நிறுவனங்களுக்கும் பாஜகவுக்கும் என்ன தொடர்பு? எவ்வளவு நன்கொடைகள் பெறப்பட்டுள்ளன?

இந்த விவகாரம் தொடர்பாக நிதி அமைச்சகம் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு காங்கிரஸ் கடிதம். ஒரு பக்கம் தேர்தல் பத்திரங்கள் மூலம் வசூல், மற்றொரு பக்கம் சோதனைகள் நடத்தி பிளாக்மெயில் செய்து பாஜக வசூல்வேட்டை நடத்தியுள்ளது.

அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமானவரித்துறை ஆகிய 3 அமைப்புகளும் பாஜகவால் முறைகேடாக பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு அவர் பேட்டியளித்துள்ளார்.

### மருத்துவர்களை, நகராட்சிகளில் உள்ள அர்பன் பிரைமரி ஹெல்த் சென்டர்களில் நியமித்து

# மக்களுக்கான சேவை தடையின்றி தொடர வழி ஏற்படுத்துவீர்!

## சட்டப் பேரவையில் டாக்டர் நா.எழிலன் கோரிக்கை!

சென்னை, பிப். 24 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் இருக்கின்ற மருத்துவர்களை, நகராட்சித் துறைகளில் உள்ள Urban Primary Health Centresகளில் நியமித்து நிரந்தரமாக மக்களுக்கான சேவை தடையில்லாமல் தொடர அரசு வழி ஏற்படுத்துமா என சட்டப் பேரவையில் டாக்டர் நா.எழிலன் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து சட்டப் பேரவையில் அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:



**டாக்டர் நா. எழிலன்:** நகராட்சியிலும், Urban Primary Health Centresகளிலும் ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்களை நியமிக்கின்றோம். அப்படி ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப் படும் மருத்துவர்கள் நிரந்தரமாக பணியில் இல்லாமல் இருக்கின்ற நிலை ஏற்படுகிறது. (குறுக்கீடு) நகராட்சி சம்பந்தப்பட்ட கேள்விதான். நகராட்சியில் இருக்கின்ற Urban Primary Health Centres குறித்தது. அதேபோன்று, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் ஆண்டுக்காண்டு, மேற்படிப்பு முடித்த மருத்துவர்களை bond period வைத்து extend செய்து வருகின்றோம். அப்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் இருக்கின்ற மருத்துவர்களை, நகராட்சித் துறையில் உள்ள Urban Primary Health Centresகளில் நியமித்தால் நிரந்தரமாக மக்களுக்கான சேவை தடையில்லாமல் தொடர்வதற்கு வழி ஏற்படுத்தப்படுமா என்று கேட்டு, அமர்கின்றேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** உறுப்பினர் சொல்கின்ற கருத்து நல்ல கருத்துதான். ஆனால், நகராட்சிக்கு என்று தனியாக 500க்கும் மேற்பட்ட மருத்துவர்களையும், செவிலியர்களையும் தேர்வு செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது. விரைவிலே அதற்கான அழைப்புகள் அனுப்பப்பட்டு, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு, நேரடியாக மருத்துவர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள். அப்படி பணியமர்த் தப்படும்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் மீண்டும், மீண்டும் பணி நீட் டிப்பு தருவதுபோல் மாநகராட்சியிலும் பணி நீட்டிப்பு தருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.

### வேலூர் நாகநதி கிராமத்தில் எருது விடும் விழா சம்பவத்தில்

# உயிரிழந்த ராம்கி குடும்பத்திற்கு இரங்கல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, பிப். 24–**

**வேலூர் மாவட்டம் நாகநதி கிராமத்தில் நடைபெற்ற எருது விடும் விழாவில் நிகழ்ந்த சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு இரங்கல் தெரிவித்தும் நிதியுதவி – அறிவித்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்கள் அறிவிப்பு வருமாறு:

வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கணியம்பாடி உள்வட்டம், நாகநதி கிராமத்தில் நேற்று (23.02.2024) நடைபெற்ற எருது விடும் விழாவில் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த சம்பவத்தில் வேலூர் வட்டம், அரியூர் மதுரா திருமலைக்கோடியைச் சேர்ந்த ராம்கி (வயது 24) த/பெ.சுப்பன் என்பவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமானச் செய்தியை கேட்டு மிகவும் வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில், உயிரிழந்த ராம்கி என்பவரை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு. உயிரிழந்தவரின்குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் - பிப்.26 அன்று

# "இல்லங்கள் தோறும் ஸ்டாலினின் குரல்"- துண்டுப் பிரசுரம் விநியோகம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை!

காஞ்சிபுரம், பிப், 24

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மாநகர, ஒன்றிய, நகர, பகுதிளில் "இல்லங்கள் தோறும் ஸ்டாலின் குரல்" என்ற தலைப்பில் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனைகளை அச்சிட்ட துண்டுபிரசுரங்களை வருகிற 26 ஆம் தேதி அன்று இல்லங்கள் தோறும் சென்று வழங்கி திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு::-



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில், திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனைகளையும் தமிழ்நாடு அரசின் 2024-2025 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் சிறப்பம்சங்களையும் வீடுதோறும் கொண்டு சேர்க்கவும் அதே சமயம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கும், தமிழுக்கும் தமிழர்களுக்கும் செய்து வரும் அநீதிகளைத் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் எடுத்துரைக்கும் வகையில் பிப்ரவரி 26 ஆம் தேதியன்று இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் திண்ணைப் பிரச்சாரத்தைத் தொடங்குவது என்று மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் தீர்மானிக்கிறது.

அதன் படி நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்திட்ட அரிய சாதனைகளை இல்லங்கள் தோறும் ஸ்டாலினின் குரல் ஒலிக்கட்டும் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரங்களாக அச்சடித்து கழகத்தினர் ஒவ்வொரு இல்லங்களுக்கும் நேரில் சென்று அவர்களிடம் துண்டுப்பிரசுரங்களை வழங்கி அவற்றின் சாதனைகளை அதனால் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளை எடுத்து திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும். அது மட்டுமின்றி ஒன்றிய பா.ஜ.க. அரசினால் தமிழ்நாடு , மற்றும் தமிழ்மொழி எவ்வாறு எல்லாம் பாதிப்புக் குள்ளாகியுள்ளது என்பதையும் இந்தத் துண்டுப்பிரசுரத்தில் அச்சடித்து அதனையும் கழகத்தினர் விளக்கி மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தின் அறிவிப்பிற்கிணங்க வருகிற 26.2.2024- திங்கள் கிழமை அன்று காலை முதல் இரவு வரையில் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

"இல்லங்கள் தோறும் ஸ்டாலினின் குரல்" திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ளும் போது இல்லங்களில் உள்ள குடும்பத் தலைவிகளிடம், மகளிர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், கல்லூரி மாணவியர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் புதுமைப் பெண் திட்டம், பேருந்துகளில் மகளிர் இலவச பயணம், சிறார்களுக்கான காலை சிற்றுண்டித் திட்டம், இந்த நிதி நிலை அறிக்கையில்அறிவித்த கல்லூரி மாணவர்களுக்கான மாந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் என்று திராவிட மாடல் ஆட்சியின் சாதனை திட்டங்களை எடுத்துக் கூறிட வேண்டும்.

இந்த நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர்களான காஞ்சிபுரம் டாக்டர் சுபேர்கான், உத்திரமேரூர் - ஜெ.பச்சையப்பன், மதுராந்தகம் - கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், செய்யூர் - கே.ஜி. பாஸ்கர்சுந்தரம் ஆகியோருடன் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள். உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைவரும் இணைந்து பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி இல்லங்கள் தோறும் ஸ்டாலினின் குரல் - கழக அரசின் சாதனைகளுடன் இல்லங்கள் தோறும் ஒலித்திடும் வகையில் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், கிராமங்கள் தோறும் கழக நிர்வாகிகள் தீவிரமான திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் - பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்– அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று 24/02/2024 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ். சாலை, எம். கே.டி.மகாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப்பணிகள்

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

# நாகை மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, பிப்.24-

நாகை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறுகின்றது என்று மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (24.2.2024) காலை 10.00 மணிக்கு நாகையில் மாவட்ட கழக அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1. "இல்லம் தோறும் ஸ்டாலின் குரல்" ஒலிக்கட்டும் பிரச்சாரம்.
2. மார்ச் 01 கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்.
3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சென்னை மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் கூட்டம் இன்று (24-2-2024 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் மாவட்ட கழகம் அமைந்துள்ள எண்.20/32 காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கத்தில் மாவட்ட அவைத்தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது.

ஆகவே இக்கூட்டத்திற்கு தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், தொகுதியின் மேற்பார்வையாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாநில நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள், ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா நாடாளுமன்றத் தேர்தல் குறித்து, கழக ஆக்கப் பணிகள்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரணியனை மேற்கு ஆஸ்திரேலியா மாநிலத்தின் மருத்துவத்துறை அமைச்சர் ஆம்பர் ஜாட் சான்டர்சன் (Mr. Amber Jade Sanderson) நேற்று (23.02.2024) சென்னை, ஓமந்தூரார். அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் உள்ள அமைச்சர் அலுவலகத்தில் நேரில் சந்தித்து, தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்புகள், திட்டங்கள், வளர்ச்சி பணிகள் குறித்து கேட்டறிந்து. நாட்டில் செயல்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொண்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணி ராஜன், துணை முதல்வர் மரு.கவிதா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா மாநிலத்தின் சுகாதாரத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (23.02.2024) சென்னை, தலைமைச் செயலகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, வனத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் ஆகியோர் செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில் நகர்ப்புற வனம் ஏற்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.5 கோடி நிதியை வனத்துறைக்கு வழங்கினர். இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர்/வனத்துறை தலைவர் சுப்ரத் முகபத்ரா, முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர் (பசுமை தமிழ்நாடு இயக்கம்) தீபக் ஸ்ரீவத்சவா, தலைமை வனப் பாதுகாவலர் (சென்னை மண்டலம்) திருமதி.கௌ.கீதாஞ்சலி, செங்கல்பட்டு மாவட்ட வன அலுவலர் ரவி மீனா, தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.